STR-1-TA

# வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் ஒவ்வொரு படியாக - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கிறிஸ்தவர்களில் நான்கில் ஒருவர் அவர்களுடைய வாழ்நாளில்தானே இயேசு மீண்டும் வந்திடுவார் என்பதை விசுவாசிக்கின்றனர். எதிர்காலத்தை குறித்து கரிசனையுடைய நம் அனைவருக்கும் தேவன் கூறிடும் செய்திதான் வெளிப்படுத்தின புத்தகம். அதில் சபைகளுக்கு இயேசு கிறிஸ்து இறுதியாக சொல்லிடும் வார்த்தைகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளான எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், அந்திகிறிஸ்து, தவறான மார்க்கத்தை பின்பற்றுகிரவர்களின் நிலைகளை கூறுகிறது. உபத்திரவகாலத்தில் நடக்க இருக்கும் கொடூரமான காரியங்களை கூறி எதிர்காலத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார், அர்மகேதொன் யுத்தம், இந்த பூமியில் அவருடைய இரண்டாம் வருகை போன்றவை. இந்த புத்தகத்தில் ஆயிரவருட அரசாட்சி, இந்த பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவருக்குமான இறுதி நியாயதீர்ப்பு, தம்முடைய ஜனங்களுக்காக நித்தியத்தில் என்ன திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, உங்களை படிப்படியாக இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை தெளிவாக புரிந்துகொள்ளும் விதத்தில் நடத்திசெல்ல இருக்கிறோம், தேவன் முன்னரிவித்திருக்கும் எதிர்கால நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் சமீதிருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவிடுவோம். இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

****

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு மிகவும் சுவாரஸ்யமான தலைப்பை வைத்திருக்கிறோம். நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை பார்க்க இருக்கிறோம். இப்ப, நீங்க கலக்கமடைய வேண்டாம். என்னக்கு தெரியும் பலருடைய எண்ணம், என்னவென்றால், “இந்த புத்தகத்தை என்னால புரிந்துகொள்ளவே முடியாது.” ஒன்று தெரியுமா? தேவன் இந்த புத்தகத்தை கொடுத்ததற்கு காரணம் இருக்கிறது. இன்றைக்கு நீங்கள் புரிந்துகொள்ளும் வித்தத்தில் எளியநடையில் எடுத்துக்கூறும் திறமையுடவர் அதை விளக்கமாக கூறிட இருக்கிறார். வெளிப்படுத்தின

புத்தகத்தை படிப்படியாக பார்க்க இருக்கிறோம். நம்முடைய விருந்தினர் Dr.ஜிம்மி டியோங், 1993 றிலிருந்து எருசலேமில் வாழும் ஒரு பத்திரிக்கையாளர். அந்த நாட்களிலிருந்து இஸ்ரேலின் ஒவ்வொரு பிரதமருடனும் கலந்துரையாடியிருக்கிறார், அவர்களை பேட்டிஎடுத்திருக்கிறார். எல்லா முக்கிய புள்ளிகளையும் அறிந்தவர். அதோடுகூட இவர் தீர்க்கதரிசன பண்டிதராகவும் இருக்கிறார். அவருடைய வேதத்தை முதல் பக்கம் முதல் கடைசிப்பக்கம் வரை அறிந்திருக்கிறார். ஜிம்மி, நேரசியாக நிகழ்ச்சிக்கு போகலாம். தேவன் எதற்காக இந்த புத்தகத்தை கொடுத்திருக்கிறார் உண்மையில் இந்த புத்தகம் பலருக்கு பெரிய தலைநோவை உண்டாக்குகிறது. அதை சொல்லுங். இது ஏன் முக்கியமானது, இதை வைத்து நாம் எந்த இடைத்தை அடைய இருக்கிறோம்?

**Dr. ஜிம்மி டியோங்**: வெல், முதலாவதாக, ஜான், வேதம் கூறுகிறது 2 தீமோத்தேயு 3:16ல், “வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது, பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது,” எனவே 66 புத்தகங்களையும் நாம் வாசித்து அறிந்துகொள்ள பாத்திரமான ஒன்று. இரண்டாவதாக, வெளிப்படுத்தல் 1:3 கூறுகிறது, “இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்க்கிரவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்.” எனவே வெளிப்படுத்தல் புத்தகத்தை வாசித்தால் நிச்சயம் நமக்கு ஆசீர்வாதம் உண்டாயிருக்கும். மூன்றாவதாக, வெளிப்படுத்தல் 19:10, கூறுகிறது “இயேசுவைபற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது.” எனவே இந்த புத்தகம், இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது, அருமை இரட்சகரை உயர்த்துகிறது, எனவே இந்த புத்தகத்தை வாசிப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

சரி, இது வேதத்தினுடைய கொன்னோட்டமாக இருக்கிறது. இதற்கு ஒருவித அரசியல் கண்ணோட்டமும் இருக்கிறது. நமது உலகின் இன்றைய நிலையையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும் வைத்து பார்த்தால், குறிப்பாக அதிகாரம் 16ல் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்கள் இன்றைய உலக நடைமுறையில் துளிர்ப்பதை காண முடியும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், ஆரம்பத்திலிருந்து இப்போது பார்க்கலாம். இந்த புத்தகத்தின் தலைப்பை சொல்லுங்கள், ஆக்கியோன், வரையறை, எழுத்தப்பட்ட காலம்.

**Dr. ஜிம்மி டியோங்**: இந்த புத்தகத்தின் முதல் வசனம், வெளிப்படுத்தல் 1:1 கூறுகிறது “இது இயேசு கிறிஸ்துவை பற்றின வெளிப்பாடாக இருக்கிறது.” இது இயேசு கிறிஸ்துவை ஒரு நபராக, அவருடைய வல்லமை, அவருடைய செயல்களை வெளிப்படுத்துகிறது. இது பிதாவாகிய தேவனிடமிருந்து அருளப்பட்டதாக இருக்கிறது. தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், அவர் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.

யோவான் எபேசு சபையின் மைப்பனாக இருந்தான். அது ஆசியாவிளிருந்தது. இன்றைக்கு அதுதான் நாம் பார்க்கிற நவீன கால துருகி. எபேசு ஏஜீயன் கடற்கரையோரம் அமைந்திருந்தது. வருடம் கி பி 95 இருக்கும், அது டொமிடியன் மறைவுக்கு முன்பதாக நடந்தது, அந்த காலத்தின் ரோம சாம்ராஜ்யத்தின் அரசராக

இருந்தார், அவர் யோவான் இயேசுகிறிஸ்துவை பற்றி சொன்ன சாட்சியினிமித்தமும், தேவவசனத்தை குறித்த அவனுடைய பகிரம்கமான பிரசங்கத்தினாலும், அவனை ஏஜீயன் கடல் பகுதியில் இருக்கும் தீவில் விட கட்டளையிட்டான், துருக்கியிலிருந்து சுமார் 45 மைல் தூரத்திலிருக்கும், பத்மு என்னும் தீவு. அது 3 மைல் அகலமும், 6 மைல் நீலமுமாயிருக்கும். நான், சமீபத்தில் தான் எங்கு சென்றிருந்தேன். இன்றைக்கு பது தீவில் 365 சபைகள் இருக்கிறது.

அது சுவாரஸ்யமான ஒன்றுதான், ஏன்னா யோவான் பெற்றுக்கொண்ட செய்தி தேவனிடத்திலிந்து, இயேசுவின் மூலம், பின்பு தூதனின் மூலம் அவனிடம் வந்தது. அவன் அங்கு ஏழு சபைகளுக்கு செய்திகளை எழுதி அனுப்பிட வேண்டியிருந்தது. நான், யோவான் எபேசு சபையின் மேப்பனாக இருந்ததாக கூறினேன். அவனக்கு வெளிப்படுத்தலின் 2 மற்றும் 3ம் அதிகாரங்களில் மற்ற 6 சபைகலோடும் தொடர்பு உண்டாவதை காண்கிறோம். அவர்தான் அந்த சபைகளையும் தொவங்கியவரா என்று தெரியவில்லை ஒருவேளை அவர் எழுச்சியூட்டும் பிரசன்கியாராக அங்கெல்லாம் சென்றிருக்கலாம். அவருக்கு அவர்களோடு ஒரு தொடர்பு இருந்தது, அவர்களுக்கு அருளும்படியான செய்திகளையும் இவர் பெற்றுக்கொள்கிறார். கிமு 95ல் அந்த காலக்கட்டத்தில் பது தீவிற்கு கட்டாயத்தின் பேரில் அனுப்பப்பட்டார். அங்கு தான் இந்த தரிசனங்கள் அவருக்கு அளிக்கப்பட இன்றைக்கு நாம் வாசித்து அறிந்துகொள்ளும்படி அவர் அன்று இவைகளை எழுதினார்.

எதிர்கால நிலை அல்லது தத்ரூபமா சொல்லப்பட்ட சூழ்நிலையின் அடிப்படையில் தான் இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை நான் விளக்கமளிக்கின்றேன், அதையே உங்களுக்கும் சொல்கிறேன். வெளிப்படுத்தல் புத்தகத்தை பார்க்கும்போது நாங்கள் நம்பிடும் காரியம், 3 அதிகாரங்கள் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் குறிக்கிறது. ஆனால் 4ம் அதிகாரம் 2ம் வசனத்திலிருந்து 22ம் அதிகாரம் 21ம் வசனம் வரைக்கும், எல்லாமே எதிர்காலத்தை பற்றியது, ஒரு விசேஷித்த நிகழ்விற்கு பிறகு அவையனைத்தும் நிச்சயமாக சம்பவிக்கும், அதுதான் சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்வு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், தீர்க்கதரிசன புத்தகங்கள் என்ன்றால் என்ன, நீங்க முன்பு சில இடங்களில் சொன்ன காரியங்கள் எனக்கு வியப்பாக இருந்திருக்கிறது, தேவன் யூதர்களுக்கு ஒரு கால அட்டவணையை வைத்திருக்கிராறம் புறஜாதிகளுக்கான கால அட்டவனையை வைத்திருக்கிரார், கிறிஸ்தவர்களுக்கு ஒன்றை வைத்திருக்கிறார், அதை 3 வெவ்வேறு புத்தகங்களில் கூறியிருப்பதாக சொன்னீர்கள், அதைபற்றி சொல்லுங்கள் அதோடு இந்த கேள்விக்கும் பதிலதித்திடுங்கள், தீர்க்கதரிசன புத்தகங்கள் என்றால் என்ன? தீர்க்க்கதரிசன முறையில் எதற்காக இயேசு தமது காரியங்களை வெளிப்படுத்துகிறார்.

**Dr. ஜிம்மி டியோங்**: மனித வரலாற்றில் முதல் 2,000 ஆண்டுகள், சிருஷ்டிப்பின் நாட்கள் முதல் ஆதியாகமாம் 12ல் ஆபிரகாம் வரைக்கும், அந்த 2,000 ஆண்டுகள் புறஜாதிகளுக்கான காலஅட்டவணை , மனித குடும்பத்தின் முதல் நபர்கள். ஆதியாகமம் 12 முதல் அப்போஸ்தலர் 1 வரை யூதர்களும் புறஜாதிகளும். அப்போஸ்தலர் 2 லிருந்து,

பெந்தேகோஸ்தே நாளிலிருந்து, சபை நிறுவப்பட்ட அந்த நாளிலிருந்து, நித்தியா வாழ்வுவரை, வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரம் வரைக்கும், மனித குடும்பத்தில் 3 பிரிவினர் இருக்கின்றனர், புறஜாதிகள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்.

சரி, தானியேலின் புத்தகம் புறஜாதிகளின் நாட்களை கூறுகிறது. பாபிலோனில் சிறைபிடிக்கப்பட்டது முதல் புறஜாதிகள் நித்தியத்திர்க்குள் நுழைவது வரைக்கும் உள்ள காலங்கள். எசேக்கியேலின் புத்தகம் யூதர்களுடைய காலத்தை கூறுகிறது, அதுவும் பாபிலோனில் சிரிபிடிக்கப்பட்டது முதல், யூதர்கள் நித்தியத்திர்க்குள் நுழைவது வரைக்கும் உள்ள காலத்தை விளக்குகிறது. வெளிப்படுத்தின விசேஷம் இந்த புத்தகம் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் துவங்குகிறது, வெளிப்படுத்தல் 1:18, இது சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவியாக இருக்கிறது.

தீர்க்கதரிசன புத்தகங்கள், இந்த தீர்க்கதரிசனங்களின் புத்தகளுக்கு அடிப்படியான விஷயம் என்னவென்றால் – அதற்க்கு முன்பு, வேதத்தில் தீர்க்கதரிசனமாக எழுத்தப்பட்ட ச புத்தகங்கள் இருக்கிறது, தானியேல், எசேக்கியல், சகரயாஹ், மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் – தீர்க்கதரிசன புத்தகங்களில் அடையாளங்கள் இருக்கும், இதை கவனியுங்கள், அது கற்பனை கதையல்ல, அது எடுத்துக்காட்டுகள் அல்ல, உண்மையை எடுத்துக்கூறுவதற்கு பயன்படும் அடையாளங்கள். உதாரணமாக, இந்த புத்தகத்தை பற்றி கற்றுக்கொள்ள இருக்கிறோம், வெளிப்படுத்தல் புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் இயேசு ஏழு பொன் குத்துவிளக்குகளின் நடுவில் நிற்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அவர் ஏழு நட்சத்திரங்களை கைகளில் எந்திக்கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. வெல், அது தீர்க்கதரிசன வெளிப்பாடு, ஒரு அடையாளத்தை கூறுகிறது – குத்துவிளக்குகள், கைகளில் நட்சத்திரங்கள் – ஆனால் வசனம் 20 அதிகாரம் 1, அந்த ஏழு பொன் குத்துவிளக்குகளும், ஆசியாவிலுள்ள 7 சபைகள் என்று கூறுகிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அது தன்னை தானே விளக்குகிறது.

**Dr. ஜிம்மி டியோங்**: எஸ். அவருடைய கரங்களில் இருக்கும் நட்சத்திரங்கள், அது எளுசபைகளின் தூதர்கள், எனவே,

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, இந்த வெளிப்படுத்தின விசேஷத்தை புழுவதும் புரிந்துகொள்ள ஒவ்வொரு வசனங்களாக பார்த்தால் புரியாது, என்று நீங்கள் சொல்லியிருந்தீர்கள். அப்படியென்றால் என்ன செய்யவேண்டும்?

**Dr. ஜிம்மி டியோங்**: நீங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்க வேண்டும், அதை ஊர்ந்து கவனித்தால், ஒவ்வொன்றாக வெளிப்படும். இதை புரிந்துகொள்ள நினைத்தால், இந்த புத்தகம் என்ன சொல்ல வருகிறது என்பதை பிடித்துக்கொள்ள முயன்றால், ஒன்றன் பின் ஒன்றாக அதுவே நமக்கு எல்லாவற்றையும் வெளிப்படுத்திட இடமளிக்க வேண்டும். எண்களின் வரிசையல்ல. பெரும்பாலான போதகர்கள் அதிகாரம் 1 வசனம் 1 றிலிருந்து 22 அதிகாரம் கடைசிவாசன் வரை வரிசையாக போதிக்கின்றனர். இந்த புத்தகத்தின்

நிகழ்வுகளை ஒவ்வொன்றாக வெளிப்படுத்துவதன் மூலம் மட்டுமே இதை விளங்கிக்கொள்ள முடியும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நீங்க ஒரு அற்ப்புதமான உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள். அதிலிருந்து இப்போது தொடங்கிடலாம். நீங்க 3 தூண்களை வைத்திருக்கிறீர்கள், ஜனங்களுக்கு போதிக்கும்படிக்கு ஒரு கால அட்டவனையையும் வைத்திருக்கிறீர்கள் நிச்சயம் இது அவர்களுக்கு புரியுமென நம்புகிறேன், நிச்சயமாக அவர்கள், "இது பயங்கரமா இருக்கு, வெளிப்படுத்தலில் என்ன நடக்கிறது என்பது இப்போது புரிகிறது என்பார்கள்." இதுதான் வெளிப்படுத்தலில் சொல்லப்பட்டிருக்கும் கால அட்டவணை. அதை எங்களுக்கு விளக்கி சொல்ல முடியுமா?

**Dr. ஜிம்மி டியோங்**: ஜான், இந்த 3 தூண்களும் வெளிப்படுத்தல் புத்தகத்துள் சொல்லப்பட்டிருக்கும் 3 முக்கிய எதிர்கால நிகழ்வுகலை குறிக்கிறதாக இருக்கிறது. இந்த முதல் தூண் அடுத்த நிகழ்வை குறிக்கிறது, அதுதான் சபை எடுத்துக்கொள்ளப்படுதல். இயேசு முழக்கமிடுவார், தேவனுடைய எக்காலம் முழங்கப்படும், பிரதான தூதர்கள் ஆர்ப்பரிப்பார்கள், அப்போது கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் அவரோடு வானங்களில் எரிப்போவார்கள். அதிகாரம் 4, சபை எசுத்துக்கொள்ளப்படுதல். அதிகாரம் 5, தூதர்களின் பெருங்கூட்டத்தின் ஆர்ப்பரிப்பு "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிரார்," 5ம் அதிகாரம் 12 வசனம் அப்படியே நடக்கும்.

முதலாம் நிகழ்விற்கும் இரண்டாம் நிகழ்விற்கும் இடைய இடைவெளி இருக்கிறது. அது ஏழு வருடங்கள் அடங்கிய காலகட்டம். அதுதாம் உபத்திரவ நாட்கள், அதை வெளிப்படுத்தல் 6ம் அதிகாரத்திலிருந்து 19ம் அதிகாரம் வரைக்கும் பார்க்க முடியும். 19ம் அதிகாரம் 11ல் இயேசு திரும்ப இந்த பூமிக்கு வருவதை குறித்து கூறுகிறதை நாம் பார்க்கிறோம். அவர் வெள்ளை குதிரையின் மேல் வருகிறார், அவரோடு பரலோகத்தில் இருக்கும் நாமும், எடுத்துக்கொள்ளப்படுதலில் சென்றவர்கள், அவரோடு வெள்ளை குதிரைகளில் நாமும் திரும்ப, எருசலேமிற்கு வந்திடுவோம். இந்த ஆயிரஆண்டு அரசாட்சி என்பது 20ம் அதிகாரம் 1 – 6 வசனங்களின் காலம். அதன்பிறகுதான் அதிகாரம் 20, வசனங்கள் 11-15, பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு.

இதுதான் உண்மையான பிரயாண வழிகாட்டியாக இருக்கிறது, வெளிப்படுத்தின விசேஷத்தை அறிவதற்கு இதுதான் வழிகாட்டி. இந்த வழிக்காட்டியுடன், வெளிப்படுத்தலில் உள்ள ஒவ்வொரு வசனத்தையும் எடுத்து வரலாற்றில் எப்போது நடக்கும் என்று சரியான இடத்தில் நாம் பொறுத்திட வேண்டும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். இப்போது ஒரு இடைவேளை எடுத்திடுவோம், நேயர்களே. இது மிகவும் பயங்கரமாக இருக்கிறது, இது நிச்சயம் உங்களுக்கு பிடிக்கும். வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் கால அட்டவனையை இன்னும் கொஞ்சம் தெளிவாக விளக்கிடும்படியாக ஜிம்மியிடம் கேட்கப்போகிறோம். அதன்பிறகு அதை முற்றிலுமாக விளங்கிகொள்வோம். எனவே இணைந்திருங்கள்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வரவேற்கிறோம். நேயர்களே, இதை நீங்கள் பார்க்க விரும்புகிறேன். இப்போது வெளிப்படுத்தல் புத்தகத்தை குறிந்த ஒரு முழுமையான கண்ணோட்டத்தை உங்களுக்கு கொடுத்திட இருக்கிறோம். ஜிம்மி, இந்த தூண்களை பற்றி சொல்லுங்க, எங்களுக்காக வெளிப்படுத்தின விசேஷம் முழுவதையும் விளக்கி சொல்லுங்க.

**Dr. ஜிம்மி டியோங்**: ஒரு விஷயத்தை நினைப்பூட்டுகிறேன், முதல் தூண், சபை எடுத்துக்கொள்ளப்படுதல், எடுத்துக்கொள்ளப்படுதளுக்கு ஏழு வருடங்களுக்கு பிறகு, கிறிஸ்துவின் வருகை, அல்லது கிறிஸ்துவின் வெளிப்படுதல், அதன்பிறகு ஆயிர வருட அரசாட்சி இருக்கும், அதன்பிறகு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு அல்லது பிரதிபலனின் நாட்கள். அதன்பிறகு நித்தியா வாழ்வு. சபை எடுத்துக்கொள்ளப்படும் காலத்திற்கு முன்னதாக, வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரத்தில், இயேசுகிறிஸ்துவின் தன்மையும் வல்லமையும் கூறப்பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தல் 2மற்றும் 3ம் அதிகாரங்களில் இயேசுகிறிஸ்து சபைகளுக்கு சொல்லும் இறுதியான வார்த்தைகளை பார்க்கிறோம். அதாவது, தனிப்பட்ட வாழ்வில் எழுப்புதல் உண்டாக, வெளிப்படுதத்தின விசேஷம் அதிகாரம் 2 மற்றும் 3 வாசியுங்கள். அந்த ஏழு கடிதங்களும் இன்றைய கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு மிகவும் வல்லமையானதாக இருக்கிறது. நான்காம் அதிகாரத்தில், நான்காம் அதிகாரம் 1 வசனம் சபை எடுத்துக்கொள்ளப்படுவதை கூறுகிறது. இயேசு முழங்குகிறார், பிரதான தூதர்கள் முழங்குகின்றனர், தேவ எக்காலம் முழங்குகிறது, அவரோடு நாம் மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். அதிகாரம் 5ல் தூதர்களின் ஆர்ப்பரிப்பின் சத்தம் “ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்,” 5ம் அதிகாரம் 12ம் வசனம் அப்படியா ஆகும். அதன்பிறகு 6ம் அதிகாரம், 7 நியாயத்தீர்ப்புகளின் துவக்கமான 3 நிலைகள், 7 முத்திரைகளின் நியாயதீர்ப்பு இருக்கிறது, 7 எக்கால நியாயத்தீர்ப்பு, 7 கலச நியாயத்தீர்ப்புகளும் இருக்கிறது.

இந்த 7 ஆண்டு காலத்தை நீங்கள் இரண்டு பிரிவுகளாக பிரித்துகொல்லுங்கள். முதல் மூன்றரையாண்டு காலங்கள், இந்த 7 முத்திரைகளின் நியாயதீர்ப்பு இருக்கும். மேலும், இரண்டு பேர் சாட்சிகளாக நின்று பிரசங்கிக்கும் பொது யூதர்களில் சுமார் 144,000 பேர் இயேசுகிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள். அந்த காலத்தில் அவர்கள் பூமியெங்கும் சிதறிப்போய் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்திடுவார்கள். மூன்றரை ஆண்டின் இறுதியில் இந்த இரு சாட்சிகளும் கொல்லப்படுவார்கள், அவர்கள் எருசலேமின் தெருக்களில் மூன்றரை நாட்கள் கிடப்பார்கள். முழு உலகமும் அந்த நிகழ்வை காண்பார்கள். அதபிறகு அவர்கள் உயிரோடு எழுந்து பரலோகம் சென்றிடுவார்.

அதோடு உபத்திரவ காலங்களின் மத்தில்யில், பரலோகத்தில் மிகாவேல் தூதனோடு பரலோகத்தின் நல்ல தூதர்களின் சேனையும் இணைந்து சாத்தானுக்கும் அவனுடைய

தீய தூதர்களின்  சேனைக்கும் விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். அவைகள் பூமியின் மீது தள்ளப்படுவார்கள் அப்போது அவை இஸ்ரவேல் தேசத்தை தாக்கித துவங்கிடும்.

உபத்திரவ காலத்தின் கடைசி மூன்றரை ஆண்டுகள் 7 எக்காள நியாயதீர்ப்புகள் இருக்கும், 7 கலச நியாயதீர்ப்புகள் இருக்கும், அர்மகேதொன் யுத்தத்திற்காக கிழக்கிலிருந்து ராஜாக்கள் எழும்பி அந்திகிறிஸ்துவோடு இணைந்து யுத்தம் பன்னும்படியாக புறப்படுவார்கள். அந்த சமயத்தில், 19ம் அதிகாரம் 11 வசனத்திலிருந்து சொல்லப்படுகிறது, நாம் வெள்ளை குதிரைகளில் ஏறி – அது தத்ரூபமாக இருக்குமென நினைக்கிறேன் – இயேசு தமது வெள்ளை குதிரையில் ஏறிடுவார், நாம் பூமிக்கு திரும்ப வருவோம். அதுதான் இயேசு திரும்ப எருசலேம் பட்டணத்தின் ஒலிவ மலையில் இருந்குவார் என்ற வெளிப்பாட்டின் நிகழ்வு.

அதற்க்கு பிறகு ஆயிர வருட அரசாட்சி உண்டாயிருக்கும். சாத்தான், அந்த ஆயிர வருடங்களுக்கு, பாதாலக்குளியில் கட்டப்பட்டு கிடப்பான். மேலும், கிறிஸ்துவை அறிந்து சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் அவரோடு அந்த ஆயிர வருட அரசாட்சியில் அவரோடு ஆளுகை ஸஇதுகொந்டிருப்பார்கல். அந்த ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் சாத்தான்  கொஞ்சகாலத்திற்கு அவில்க்கப்பட்டிருப்பான், மறுபடியும் தேவன் அவனை சிறைபிடிப்பார், அதற்க்கு பிறகு வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, அதில் இயேசுகிறிஸ்து நியாயாதிபதியாக வீற்றிருப்பார். அவர் தம்மை மறுதலித்தவர்களை அக்கினி கடலில் தள்ளப்ப்படும்படி உத்தரவிடுவார், அதுதான் இரண்டாம் மரணம். அதற்க்கு பிறகு, நித்தியா வாழ்வு, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அருமையானது. சரி, சிலர் சரிந்துகொள்ள விரும்பும் விஷயம், கிறிஸ்துவின் நியாயாசனம் எங்கு இருக்கிறது? எடுத்ஹ்டுக்கொல்லுதலின் பொது, கிறிஸ்தவர்கள் இங்கிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள். நாம் பரலோகம் சென்றிடுவோம். அதன் பிறகு பரலோகத்தில் பல காரியங்கள் நடக்கிறது, அதேபோல பூமியிலேயும் சம்பவிக்கிறது. பரலோகத்தில் கிறிஸ்தவர்களுக்கு இருக்கப்போகிற அனுபவத்தை பற்றி சொல்லுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: சபை எடுத்துக்கொள்ளப்ப்படும்போது, ஜான், உடனடியாக, வேதம் சொல்கிறது 1 கொரிந்தியர் 15ல், கண்ணிமைக்கும் நேரத்தில், கண்ணிமைக்கும் வேகத்திற்கும் அதிவேகத்தில், இமைப்பொழுதில் நாம் இயேசுகிறிஸ்துவுக்கும் புன்பாக நின்றிடுவோமாம். அந்த கட்டத்தில் அந்த சமயத்தில் அதுவே கிறிஸ்துவின் நியாயாசனமாக இருக்கும். அதற்க்கு காரணம் என்னவென்றால், நமக்கு ஒரு உடை வேண்டும், நம்முடைய கல்யாண வஸ்திரம், நாம் இயேசு கிறிஸ்துவை விவாகம் பண்ணும்போது அத்தான் அணித்திருப்போம். 19ம் அதிகாரத்தில், வாசனைகள் 7,8 மற்றும் 9 வெளிப்படுத்தல் புத்தகத்தில், அங்கே கல்யாண கொண்டாட்டமும் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்தும் நடப்பதை பார்க்கிறோம், அது 7 ஆண்டு காலங்களுக்கு நீடிப்பதை நாம் பார்க்கிறோம்.

ஆனால் எடுத்துக்கொள்ளப்படுவதர்க்கும் உபத்ஹ்டிரவ காலத்தின் துவக்கத்திற்கும் மத்தியில் குறுகிய காலம் இருக்கிறது, அது எவ்வளவு நாட்கள் என்று தெரியாது,

அப்போது கிறிஸ்துவின் நியாயாசனம் உண்டாகும் என்று தோன்றுகிறது. நீங்கள் இரட்சிக்கப்பட்டவரா இல்லையா என்பதை நியான்தீர்க்கும் காலம் அது கிடையாது. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் மட்டுமே கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க முடியும். அது உங்களுடைய கிரியைகள் நியாயந்தீர்க்கப்படும் காலம். அவருடைய வல்லமையோடு அவருடைய மகிமைக்காக நீங்கள் செய்த நற்க்கிரியைகளுக்கான பலனை அறுவடை செய்திடும் காலமாக அது இருந்திடும். சில கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொந்த பெலனில் அவர்களுடைய மகிமைக்காக சிலவற்றை செய்திருக்கலாம், அவர்கள் நஷ்டமடைந்திடுவார்கள். இதுதான் இயேசு கிறிஸ்துவை விவாகம் பண்ணும்போது நாம் அணிந்திடும் வஸ்திரத்தை நிர்ணயிப்பதாக இருக்கிறது.

யூதர்களுடைய திருமண முறையின்படியே, திருமண சடங்குகளுக்கு பிறகு, அந்த கொண்டாட்டங்கள் சுமார் ஏழு நாட்களுக்கு நீடித்து இருக்கும். அந்த ஏழு ஆண்டுகள் நாம் இஎசுகிரிச்துவோடு பரலோகத்தில் ஆனந்தமாக சந்தோஷமாக கொண்டாடிக்கொண்டிருப்போம், அதேசமயத்தில் பூமியில் நியாயதீர்ப்பும், அழிவுமுண்டாகி, எல்லாம் வெளியரங்கமாகி தேவன் சாகலத்தையும் தமக்கு கீல்ப்படுத்திடுவார் பூமியில் இருப்பவர்களும் அவருக்கு கீல்ப்பட்டிருப்பார்கள் அதினால் அவர் தமது ராஜ்யத்தை இந்த பூமியில் பிரச்தாபித்திட எதுவாயிருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** யா. பவுல் கூறுகிறார், “நாம் எல்லாரும்” – கிறிஸ்தவர்களுக்கு சொல்லுகிறார் – “சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படி நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.” நன்மையானதர்க்கு, நித்தியமாக இருக்கும் பலனை நாம் பெற்றுக்கொள்வோம். தீமையாக இருந்தால் இலந்தவர்கலாயிருப்போம், ஆனாலும் கிறிஸ்தவர்களாக, நாம் அங்கேயே இருந்திடுவோம்.

**Dr. ஜிம்மி டியோங்**: உண்மையில் அருமையான காரியம் என்ன தெரியுமா: நாம் பெற்றுக்கொள்ளப்போகும் 5 கிரீடங்கள் இருக்கிறது. அழிவில்லாத கிரீடம் இருக்கிறது 1 கொரிந்தியர் 9:27. ஆத்துமா ஆதாயம் செய்தவர்களுக்கு மகிச்சியின் கிரீடம், அது 2 தெசலோனிக்கேயர் 2:19. சோதனையை சகிக்கிரவனுக்கு ஜீவகிரீடம் இருக்கிறது, யாக்கோபு 1:12, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வளர உதவுகிரவர்களுக்கு மகிமையின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது, இ பேதுரு 5:1-4. நீதியின் கிரீடத்தை பெறுவேன் என்று பவுல் கூறுகிறார், அவர் மட்டும் அல்ல, கிறிஸ்துவின் வருகையை ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிற அனைவருக்கும், நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருகிறது, 2 தீமோத்தேயு4:8

வெல், வெளிப்படுத்தல் 4ம் அதிகாரம் 10ம் வசனம் கூறுகிறது அந்த கிரீடங்களை ஏந்திக்கொண்டு இயேசுவின் சிங்காசனத்திற்கு முன்பாக வந்து, அவர் செய்த காரியங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் அவருடைய பாதத்தில் வைத்திடுவோம். இன்னொரு காரியமும் இருக்கிறது. அந்த கிரீடங்கள் தான் நித்தியத்தில் நாம் எப்படி அவரை சேவித்திடுவோம் எப்படி வாழப்போகிறோம் என்பதை

நிர்ணயிப்பதாக இருக்கிறது – அதை பற்றி பிறகு பார்க்கலாம். ஆனால் நித்தியநித்தியமாக எப்படி இருப்போம் என்பதை அதுதான் நிர்ணயிக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** யா. இவற்றை குறித்து இன்னும் அதிகமாக பார்க்க இருக்கிறோம், மேலும் அதற்காண வசனகளையும் நாம் எடுத்துக்கொரிட இருக்கிறோம். இப்போது மேலோட்டமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆல்ரைட், இப்போது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் விவாகம் நடக்கிறது. இது மிகவும் முக்கியமான ஒன்று ஏனென்றால் வெளிப்படுத்தலில் வேசியை குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறதே. அதை குறித்து கொஞ்சம் விளக்கி சொல்லுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: அந்த உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரையாண்டுகள், இதில் ஏன் இந்த புத்தகத்தை ஒவ்வொரு வசனமாக தியானிக்க கூடாதென சொல்கிறேன் என்பதை புரிந்துகொள்வீர்கள், அதை நிகழ்வுகளின் வரிசையில் தியானிக்க வேண்டும். ஒருவேளை நாம் உபத்திரவ காலத்தின் துவக்கத்தில் இருந்தால், எடுத்துக்கொள்ளப்படுதளுக்கு பிறகு நடக்கிறது, அதுதான் நான்காம் அதிகாரம், எடுத்துக்கொள்ளப்படுதல், நியாய்த்தேர்ப்புஇந் துவக்கம், அதிகாரம் 6, ஆனால் நாம் 17ம் அதிகாரத்தை பற்றி சொல்லவில்லை, அதிதான வேசியை பற்றி சொல்லப்படுகிறது, சோரஸ்திரீ. அதாவது இந்த நிலையானது, கள்ள போதனை 450000 ஆண்டுகளுக்கு முன்பாக பாபிலோனின் காலத்திலேயே துவங்கியிருக்கிரதாம், நிம்ரோத், அவன் ஐப்பிராத்து நதிகளின் கரைகளில் இருந்தபோதே துவங்கினது, ஷைனாரில் உள்ளது, நவீன கால ஈராக். பாபிலோனில் தவறான மார்க்கம் உண்டாக்கப்படிருந்தது. 17ம் அதிகாரம் அதை வெளிப்படுத்துகிறது, அடுத்த நிகழ்ச்சியில் அதைப்பற்றி அதிகமாக பார்த்திடலாம், ஆனால் இதுதான் உபத்திரவ காலத்தின் முதல் பகுதில் காணப்படும் இடைவெளியை நிரப்புகிறது. முதல் மூன்றரை ஆண்டு காலத்தின் உபத்திரவ நாட்களுக்கு பின்னணி இதுதான். அது அந்திகிரிச்துவினால் ஆளப்படப்போகிறது. இந்த காலகட்டத்தில் ஆளுகிரவநின் ஆள்தத்துவத்தை விளக்கிடும் 27 பெயர்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** யா. வெளிப்படுத்தலில் சாத்தானின் திருத்துவமும் சொல்லப்பட்டிருக்கிறது. விளக்கிடுங்கள்.

**Dr. ஜிம்மி டியோங்**: வெல், சாத்தானின் திரித்துவ தன்மை பரிசுத்த தேவனுடைய திரித்துவத்தை பொய்யாய் காண்பிக்க முயலுகிறது. நமக்கு பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிடுத்த ஆவியாகிய தேவன் உண்டு, பரிசுத்த திரித்துவம். சாத்தான், அல்லது வலுசர்ப்பம், அல்லது பிசாசு என்று வெளிப்படுத்தலில் விளக்கப்பட்டுள்ளது, இதுதான் பிதாவாகிய தேவனுடைய இடைத்தை அடைய நினைக்கிறது. அதற்க்கு பிறகு 13ம் அதிகாரம் 1ல் வசனத்தில் மிருகம் என்று சொல்லப்படுகிறது, வெளிப்படுத்தல் புத்தகத்தில் மட்டும் 42 முறை சொல்லப்பட்டிருக்கிறது. அது அந்திக்கிரிச்துவை குறிக்கிறது. நான் சொன்னது நினைவிருக்கட்டும் அந்திகிரிச்துவுக்கு 27 பெயர்கள் இருக்கிறது. அதில் ஒன்று சமுத்திரத்திலிருந்து எலும்பும் ஒரு மிருகம். அதற்க்கு பிறகு வெளிப்படுத்தல் 13:12ல்

சொல்லப்பட்டிருக்கும் கள்ளத்தீர்க்கதரிசி. இதுதான் சாத்தானின; திரிதுவத்தில் 3ம் நபர். அவன் பரிசுத்த ஆவியானவரின் இடைத்தை நிரப்ப முயல்கிறான்.

இதிலிருந்து சாத்தானின் திரிதத்துவம் விளங்குகிறது: சாத்தான், அந்திகிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி. ஜான், அந்திகிறிஸ்துவைக்குறித்து பேசிட விரும்புகிறேன், ஏனென்றால் 7 ஆண்டு உபத்திரவ காலத்தில் பெரிய பங்கு வகிப்பது இதனுடைய கிரியைகள் தான். அந்திகிறிஸ்து, நான் நம்புகிறேன், இன்றைக்கு இந்த பூமியில் செல்வாக்கோடு வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். அது அப்படியே இருக்கட்டும், ஜிம்மி. அதை நாம் அடுத்த வாரம் தொடர்ந்து பார்த்திடலாம். நீங்க எதனால அப்படி சொல்றீங்கன்றதையும் விளக்கி சொல்லப்போறீங்க. நேயர்களும் அதை அறிந்துகொள்ள, வேண்டும் என்திரு நான் விரும்புகிறேன்: யோவான் தனது பொருளடக்கத்தை வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரத்தில் கூறியிருக்கிறார். இயேசு தம்மிடம் கூறியதாக சொல்கிறார், “நீ கான்கிரவைகளை எழுது என்றார், இது இயேசுவை பற்றின தரிசனம், இயேசுகிறிஸ்துவின் வல்லமை அவருடைய தன்மை, அதைக்குறித்து அடுத்த வாரம் பார்க்க இருக்கிறோம். மேலும் அவர் சொல்லுகிறார், “சம்பவிக்காப்போகிறவைகள்” ஏழு சபைகளுக்கு சொல்லும்படியான நிருபங்களை கொடுக்கிறார். அதற்கு பிறகு அவர் இவைகளுக்கு பின்பு நடக்கபோகிரவைகள் என்று எதிர்கால நிகழ்வுகளையும் சொல்கிறார்.

அந்தி கிறிஸ்துவைக்குறித்தும் பேசப்போகிறோம், இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாட்டை குறித்து பேசிடபோகிறோம், அவருடைய தன்மை, சபைகளுக்கு என்ன சொல்லியிருக்கிறார், அதன்பிறகு பூமியின் மேல் வர இருக்கும் முத்திரைகளின் நியாயதீர்ப்பைகுறித்து பார்க்க இருக்கிறோம் அது எப்போது சம்பவிக்கும் அதனுடைய வஸ்ரிசைகளையும் கூறிடுவோம், அப்போது என்னவெல்லாம் சம்பவிக்கும் என்று கூறிடுவோம். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தேவன் முன்மொழிந்திருக்கிறார்? அதை நீங்கள் பார்க்க தவறமாட்டீர்கள் என, நினைக்கிறேன், அடுத்த வாரம் தவறாமல் பாருங்கள்.


எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2017 A.T.R.I.